**குருணாகல் பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குருணாகல் பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 கணக்கீட்டு குறைபாடுகளுக்குரிய ரூபா 12,286,871 பெறுமதியான குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 02 கணக்கீட்டு குறைபாடு களுக்குரிய ரூபா 7,238,118 பெறுமதி கணக்குகளில் கூடுதலாக காட்டப்பட்டுள்ளன. | கணக்கீட்டு குறைபாடுகள் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதாக அறியத் தருகின்றேன் |
| (ஆ) | 4 கணக்கு விடயங்களுக்கு உரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் மொத்தம் ரூபா 160,781,451 ஆக இருந்த போதும் உரிய அட்டவணைகளின் பிரகாரம் மீதிகளின் மொத்தம் ரூபா 107,214,100 ஆக இருந்ததால் ரூபா 53,567,351 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | இணங்காத மீதிகள் ஒப்பிடப்பட்டு சரிசெய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் அட்டவணை மற்றும் கணக்குகளுக்கு இடையே ஒப்பிட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறியதருகின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரூபா 243,207,940 பெறுமதி யான 07 கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது வற்றை திருப்திகரமாக சான்று றுதிப்படுத்த முடியாதிருந்தது. | குறித்த சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணனி உதிரப்பாக பதிவேடு எதிர்கால்த்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் முதலீடுகளுக்காக சபையிடம் எவ்வித சான்று களும் காணப்படவில்லை. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றம் முகாமைத்தீர்மானங்களுடனான இணக்கமின்மை கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்விதி 134 | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேுசங்கள் முன்னராக இனங்கண்டு முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக பிரசித்தப்பட்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுக்கு இணங்க செயற்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 165,750,040 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 202,247,275 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட் ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 11,531,440 | 13,769,491 | 12,123,518 | 8,070,706 | 11,420,130 | 11,404,230 | 13,681,671 | 25,734,554 |
| வாடகை | 2,894,440 | 25,042,067 | 2,248,297 | 14,909 | 2,699,855 | 1,863,611 | 1,885,952 | 9,631 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,839,800 | 1,778,204 | 1,778,204 | - | 1,839,800 | 2,512,637 | 803,363 | - |
| ஏனைய வருமானம் | 164,753,680 | 258,258,244 | 341,266,731 | 41,196,061 | 171,897,670 | 235,227,713 | 11,784,493 | 251,246,342 |
| மொத்தம் | 181,019,360 | 298,846,006 | 357,416,750 | 49,281,676 | 187,857,455 | 251,008,191 | 28,155,479 | 276,990,527 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ஏக்கர் வரி ரூபா 8,070,706 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 4,194,624 தொகை 01 ஆண்டிற்கும் 03 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்கான நிலுவையாக இருந்தது. | நிலுவை வருமானம் துரிதமாக சேகரிக்கப்பட அறவிடப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) பாதீடு செய்யப்பட்ட நிர்மாணங்கள் நிறைவேற்றப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டில் இணையத்தள மற்றும் நூலக சேவைகளுக்காக ரூபா 800,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதற்காக ரூபா 150,000 செலவிடப்பட்டிருந்தது. | பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு முறையாக பயன்படுத்த வேண்டும். | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | தொரரட்டியாவ புதிய நூலக கட்டிடம் நிர்மாணத்திற்காக ரூபா 850,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதும் அதன் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு முறையாக பயன்படுத்த வேண்டும். | இரண்டு உப அலுவலகங்களை அமைப்பது சிக்கலாக இருப்பதால் ஒரு அலுவலகத்தை மாத்திரம் நிர்மாணித்து பூர்த்தி செய்துள்ளதாக அறிய தருகின்றேன் க |

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் ரூபா 2,396,728 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த தம்பொக்க உக்கலடையாத கழிவு வகைப்படுத்தல் நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படவில்லை. | அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் பெற்றக்கொள்ளப்பட்டு நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டு கழிவுப்பொருள் முகாமை செய்யப்பட வேண்டும். | இந்நிலையத்திற்கு நீர், மின்சாரம் போன்ற ஆரம்ப வசதிகள் மற்றும் வெளியே இருந்து கொண்டு வரப்படும் உக்காத கழிவுகளை பெற்றுக்கொள்ள பிரிவொன்று நிர்மாணிக்காமை இதற்கான பிரதான காரணமாகும். எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட 22 உத்தியோகத்தர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | மிகையை முறைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 21 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ளனர் |

### 3.3 சர்சைக்குரியதன்மையிலான கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தாபன விதிக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் முதலாவது பிரிவுடன் வாசிக்க வேண்டிய 1990 யூன் 05 ஆந் திகதிய மாகாண சபை அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 3(ஆ) பிரிகாரம் ஆளுனரின் அங்கீகாரமின்றி அரச நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் வெவ்வேறு நிதிஏற்பாட்டின் பேரில் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை சபை நிதியத்திற்கு கிடைத்திருந்த நிர்வாகச் செலவினத்தில் ரூபா 2,386,631 தொகை சபையில் சேவையிலுள்ள 22 உத்தியோகத்தர்களுக்கு இடையே பகிரப்பட்டிருந்தன. | அங்கீகாரம் இன்றி கொடுப்பனவு செய்த பணத்தை அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1990 யூன் 05 ஆந் திகதிய மாகாண சபை அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பிரதி யொன்று ஆய்வு செய்து பின்னர் பதில் சமர்ப்பிப்பதாக அறிய தருகின்றேன். |

**3.4 பெறுகைகள்**

--------------------

**ஒப்பந்த நிர்வாகம்**

------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 499,108 ஆல் சென்திரியா அரங்கு வீதி அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த 04 இடங்களுக்காக முறையாக தார் ஊற்றாமையால் 1 ½ அங்குல சிறுகற்கள் தோன்றியிருந்தன. வீதியின் இறுதி பகுதியில் கற்கள் கீழிறங்கி குழிகள் தோன்றியிருந்தன. | நிர்மாண வேலைகள் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும். | உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைக் எடுக்குமாறு உள்ளுராட்சிமன்ற ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |